## பாடம் - 3 / الدرس الثالث

### தொழுகையின் நேரங்கள் / أوقات الصلاة

- லுஹர் தொழுகையின் நேரம் சூரியன் உச்சியிலிருந்து சாயத் துவங்கியது முதல் ஒரு பொருளின் நிழல் அதன் உயரத்தின் அளவுக்கு வரும் வரை.
- அஸர் தெழுகையின் நேரம் ஒரு பொருளின் நிழல் அப்பொருளின் உயரத்தினளவை அடைந்தவுடன் ஆரம்பமாகி சூரியன் மறையும் வரை நீடிக்கின்றது.
- மஃரிப் தெழுகையின் நேரம் சூரியன் மறைந்ததிலிருந்து செம்மேகம் மறையும் வரை. செம்மேகம் என்பது சூரியன் மறைந்த பிறகு தோன்றக்கூடியது.
- இஷா தெழுகையின் நேரம் செம்மேகம் மறைந்ததிலிருந்து இரவின் பகுதி வரை.
- ஃபஜ்ர் தெழுகையின் நேரம் அதிகாலை உதய மானதிலிருந்து சூரியன் உதயமாகும் வரை.

### தொழக்கூடாத நேரங்கள்

தொழக்கூடாத நேரங்கள் சில நேரங்கள் உள்ளன. அவை வருமாறு:

1. ஃபஜ்ருத் தொழுகைக்குப் பிறகிலிருந்து சூரியன் உதயமாகி ஒரு ஈட்டி அளவு உயரும் வரை.

2. நண்பகலில் சூரியன் நடு உச்சிக்கு வரும்போது. ஒரு பொருளுக்கு நிழல் வருவது நின்றுவிடுவதன் மூலம் இதை அறிந்துகொள்ளலாம். இந்நேரம் சூரியன் மேற்கின் பக்கம் சாயும் வரை நீடிக்கிறது.

3. அஸர் தொழுகைக்குப் பிறகிலிருந்து சூரியன் மறையும் வரை.ஆனாலும் தடை செய்யப்பட்ட நேரங்களில் சில தொழுகைகளைத் தொழுவது ஆகுமானதே. உதாரணமாக பள்ளிவாசலின் காணிக்கைத் தொழுகை, ஜனாஸாத் தொழுகை, கிரகணத் தொழுகை, தவாஃபுக்குப் பிறகு நிறைவேற்றப்படும் இரண்டு ரக்அத், உளுவின் சுன்னத் இரண்டு ரக்அத் போன்று காரண காரியத்தோடு நிறைவேற்றப்படக்கூடிய தொழுகைகளைப்போல. இவ்வாறே தவறவிட்ட ஃபர்ழுத் தொழுகைகளை நிறைவேற்றுவதும் கூடும்.

عَنْ أَنَسٍ قَالَ: قَالَ نَبِيُّ الله ﷺ : مَنْ نَسِيَ صَلاَةً أَوْ نَامَ عَنْهَا فَكَفَّارَتُهَا أَنْ يُصَلِّيَهَا إِذَا ذَكَرَهَا (خ/ ٥٩٧،م/ ٦٨٤)

'யாரேனும் ஒரு தொழுகையை மறந்துவிட்டால் அல்லது அதைத் தொழாமல் தூங்கிவிட்டால் நினைவுக்கு வந்ததும் அதனை நிறைவேற்றிவிடுவதே அதற்குரிய பரிகாரமாகும்' என நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அறிவிப்பவர்: அனஸ் (ரலி), நூல்: புகாரி (597), முஸ்லிம் (684)

அதுபோல பஜ்ருடைய முன் சுன்னத்தை பஜ்ருக்குப் பிறகு நிறைவேற்றுவதும், ளுஹருடைய சுன்னத் தவறிவிட்டால் அதை அஸருக்குப் பிறகு நிறைவேற்று வதும் கூடும்.

### தொழக்கூடாத இடங்கள்:

**1.அடக்கஸ்தலங்கள்.**

عَنْ أَبِي سَعِيدٍ الْخُدْرِيِّ قَالَ قَالَ رَسُولُ الله ﷺ : الْأَرْضُ كُلُّهَا مَسْجِدٌ إِلَّا الْمَقْبَرَةَ وَالْحَمَّامَ (ت/ ٣١٧، د/ ٤٩٢، جه/ ٧٤٥)

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'குளியலறை மற்றும் அடக்கஸ்தலங்கள் தவிர பூமி முழுவதும் தொழுமிடம் ஆகும்.' (திர்மதி-317, அபூதாவூத்-492, இப்னுமாஜா-745) ஆயினும் அடக்கஸ்தலத்தில் ஜனாஸா தொழுகையைத் தொழுவது கூடும்.

**2.கப்ரை நோக்கித் தொழுவது கூடாது.**

عَنْ أَبِي مَرْثَدٍ الْغَنَوِيِّ ﷺ قَالَ: سَمِعْتُ رَسُولَ الله - ﷺ - يَقُولُ: لَا تُصَلُّوا إِلَى الْقُبُورِ وَلَا تَجْلِسُوا عَلَيْهَا. (م/ ٩٧٣)

'கப்ருகளை நோக்கித் தொழாதீர்கள் அவற்றின் மீது உட்காராதீர்கள்!' என நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: அபூமர்ஸத்(ரலி), நூல்: முஸலிம்(973)

**3.ஒட்டகம் தங்குமிடங்களிலும் அசுத்தங்கள் உள்ள இடங்களிலும் தொழுவது கூடாது**